RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-99 | 16 ஏப்ரல் | புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## அனைவரும் அமைதி காக்கவும்' மீண்டும் வெடித்த வன்முறையால் மம்தா வேண்டுகோள்!

கொல்கத்தா, ஏப்.16

மாநிலத்தில் அமைதி நிலவ அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும், வன்முறை போராட்டங்கள் மூலம் பொறியில் சிக்காதீர்கள் என்றும் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி வேண்டுகோள் விடுத்துள்ளார்.



வக்பு சட்ட திருத்தத்தை எதிர்த்து முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் மேற்கு வங்கத்தின் முர்ஷிதாபாத் மாவட்டத்தின் துலியன் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை போராட்டங்கள் நடைபெற்றன. இதில் மூன்று பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். இதையடுத்து, இந்தப் போராட்டம் இரு தரப்பினரிடையேயான மோதலாக உருவெடுத்தது. மாநிலத்தின் வேறு சில பகுதிகளிலும் வன்முறைச் சம்பவங்கள் நடந்தன.

இதனிடையே, மேற்கு வங்கத்தின் தெற்கு 24 பர்கானாஸ் மாவட்டத்தில் உள்ள பங்கரில் காவல்துறையினருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே நேற்று முன்தினம் (திங்கள்கிழமை) ஏற்பட்ட மோதலில் பலர் காயமடைந்தனர், பல போலீஸ் வாகனங்கள் எரிக்கப்பட்டன.

வக்பு திருத்தச் சட்டம் மேற்கு வங்கத்தில் அமல்படுத்தப்படாது என்று கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்த மம்தா பானர்ஜி மாநிலத்தின் அமைதிக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். நேற்று நடந்த வன்முறையை அடுத்து, அனைவரும் அமைதி காக்க வேண்டும் என்ற மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளார் மம்தா பானர்ஜி.

இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள மம்தா பானர்ஜி, "மதத்தின் பெயரால், மதத்துக்கு தொடர்பற்ற விளையாட்டுகளை யாரும் விளையாடக்கூடாது. பக்தி, பாசம், மனிதநேயம், அமைதி, நட்பு, கலாச்சாரம், நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமை ஆகியவற்றையே தர்மம் குறிக்கிறது. மனிதர்களை நேசிக்க வேண்டும் என்பதே அனைத்து மதங்களின் உயர்ந்த கருத்தாக உள்ளது. நாம் தனியாகப் பிறக்கிறோம், தனியாகவே இறக்கிறோம்; பிறகு ஏன் சண்டையிட வேண்டும்? கலவரங்கள், போர், அமைதியின்மை ஆகியவை எதற்கு?

அனுமதிபெற்று அமைதியான முறையில் போராட்டங்களை நடத்த அனைவருக்கும் உரிமை உண்டு. ஆனால், யாராக இருந்தாலும் சரி, சட்டத்தை தங்கள் கைகளில் எடுத்துக்கொள்ள அனுமதி கிடையாது. சட்டத்தின் பாதுகாவலர்களாக நாங்கள் இருக்கிறோம். சட்டத்துக்கு அப்பாற்பட்டு செயல்படுபவர்கள் எங்களுக்குத் தேவையில்லை. அதனால்தான் கூறுகிறேன், யாராவது உங்களைத் தூண்டிவிட முயற்சிக்கும்போது, பொறியில் சிக்கிக்கொள்ள வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆத்திரமூட்டல்களுக்கு மத்தியில் மனதை அமைதியாக வைத்திருப்பவர்கள்தான் உண்மையான வெற்றியாளர்கள். அதுதான் உண்மையான வெற்றி" என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், முர்ஷிதாபாத்தில் நிலைமை படிப்படியாக இயல்பு நிலைக்குத் திரும்பி வருவதாகவும், கடைகள் மீண்டும் திறக்கப்பட்டு, இடம்பெயர்ந்த குடும்பங்கள் திரும்பி வரத் தொடங்கியுள்ளன என்றும் மேற்கு வங்க காவல்துறை தெரிவித்துள்ளது.

## மாநில உரிமைகளைப் பாதுகாக்க உயர்நிலைக் குழு சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஏப்.16

மாநில உரிமைகளைப் பாதுகாக்க ஓய்வு பெற்ற நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் உயர்நிலைக் குழு அமைக்கப்படும் என தமிழக சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.



மாநில சுயாட்சி தொடர்பாக தமிழக சட்டப்பேரவையில் இன்று (ஏப்.15) விதி எண் 110 ன் கீழ் முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அதனை வெளியிட்டு அவர் கூறியதாவது: மாநிலங்களின் நியாயமான உரிமைகளைப் பாதுகாக்க உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்படுகிறது. இந்தக் குழுவின் இடைக்கால அறிக்கை வரும் ஜனவரி 2026 ல் சமர்ப்பிக்கப்படும். இறுதி அறிக்கை இரண்டு ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்படும். இக்குழு மாநில உரிமைகளை மீட்டெடுப்பதற்கான பரிந்துரைகளை அரசுக்கு வழங்கும்.

மாநில பட்டியலில் உள்ள கல்வி, மருத்துவம், சட்டம், நிதி ஆகியவற்றை மத்திய அரசு மடைமாற்றம் செய்ய முயற்சி செய்து வருகிறது. மருத்துவக் கொள்கையை நீட் தேர்வு நீர்த்துபோகச் செய்துள்ளது. நீட் தேர்வு காரணமாக பல மாணவர்களின் மருத்துவக் கனவு சிதைந்து போயுள்ளது. இதனால் பல மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.


மேலும், மும்மொழிக் கொள்கை என்ற போர்வையில் இந்தியை திணிக்க முயற்சி நடக்கிறது. ஜிஎஸ்டியை கொண்டு வந்தபோதே தமிழ்நாடு அதற்குக் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தது. மத்திய அரசின் ஜிஎஸ்டி முறையால் மாநில அரசுகளுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாறாக மாநில உரிமைகள் ஒவ்வொன்றாக பறிக்கப்பட்டு வருகின்றன.

மாநில உரிமைகளுக்கான முதல் குரல் தமிழகத்தில் இருந்துதான் ஒலிக்கத் தொடங்கும். அந்த வகையில் மாநிலங்களின் நியாயமான உரிமைகளை பாதுகாக்க ஓய்வு பெற்ற நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் குழு அமைக்கப்படும். அனைத்து மாநிலங்களின் நலன் கருதி இந்த உயர்மட்ட குழு அமைக்கப்படுகிறது. இதில் ஓய்வுபெற்ற முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி அசோக் வர்தன், திட்டக்குழு முன்னாள் தலைவர் நாகநாதன், ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாக இருப்பர். இந்தக் குழுவின் இடைக்கால அறிக்கை வரும் ஜனவரி 2026 ல் சமர்ப்பிக்கப்படும். இறுதி அறிக்கை இரண்டு ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்படும். இவ்வாறு முதல்வர் சட்டப்பேரவையில் அறிவித்தார்.

## மே 2ல் அதிமுக செயற்குழுக் கூட்டம்! எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

சென்னை, ஏப்.16

வரும் மே.2ம் தேதி சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சி தலைமையகத்தில் அதிமுக செயற்குழுக் கூட்டம் நடைபெறும் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "வருகின்ற 2.5.2025 வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு, சென்னை, ராயப்பேட்டை, அவ்வை சண்முகம் சாலையில் உள்ள தலைமைக் கழக அலுவலகத்தில், அ. தமிழ்மகன் உசேன் தலைமையில் அதிமுக செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

இதில் கலந்துகொள்ள செயற்குழு உறுப்பினர்களான, தலைமைக் கழகச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், பிற மாநிலக் கழகச் செயலாளர்கள், கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் (மகளிர்) அனைவருக்கும் தனித் தனியே அழைப்பிதழ் அனுப்பி வைக்கப்படும்.

உறுப்பினர்கள் அனைவரும் தங்களுக்குரிய அழைப்பிதழோடு தவறாமல் வருகை தந்து, செயற்குழு கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

கூட்டணி அமைந்த பின்னர்.. 2026 தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை எடப்பாடி பழனிசாமி தலைமையில் அதிமுக பாஜக கூட்டணி எதிர்கொள்ளும் என்று அண்மையில் அமித் ஷா அறிவித்தார். அந்த அறிவிப்பு வெளியான சில நாட்களில் அதிமுகவின் செயற்குழுக் கூட்டம் முதன்முறையாகக் கூடுவதால் இந்தக் கூட்டம் அரசியல் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

அதிருப்திகள் பற்றி ஆலோசிக்கப்படுமா? மேலும், அதிமுக பாஜக கூட்டணி அமைந்ததில் அடிமட்டத் தொண்டர்கள் பலரும் அதிருப்தியில் இருப்பதாக பேசப்படும் சூழலிலும், பாஜக கூட்டணி அமைந்தால் கட்சியிலிருந்து விலகுவதாக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறியதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில்தான் இந்த செயற்குழுக் கூட்டம் கூடுகிறது. எனவே இதில் கூட்டணி தொடர்பான மூத்த தலைவர்கலின் கருத்து, கடைநிலைத் தொண்டர்கள் மனநிலை பற்றி ஆலோசிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

'திருப்பூர் கூட்டம் ஒரு சான்று..' திருப்பூர் மாநகர் மாவட்ட அதிமுக சார்பில் திருப்பூர் தெற்கு சட்டப்பேரவை தொகுதி பூத் கமிட்டி நிர்வாகிகள் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் அதிமுக பாஜக கூட்டணி தொடர்பான அதிருப்திகள் வெளிப்பட்டன.

அக்கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ, சு.குணசேகரன் பேசுகையில், "அதிமுக பாஜக கூட்டணி அமைந்தது வருத்தமாக இருந்தாலும், இயக்கத்தை காப்பாற்ற வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. கடந்த மக்களவைத் தேர்தலின் போது, இந்த கூட்டணி அமைந்தபோது முஸ்லிம் சகோதரர்கள் வருத்தமடைந்து வேலை செய்யமாட்டோம் என்றார்கள். முடிந்தவரை அதிமுகவுக்காக பணி செய்யுங்கள் என வலியுறுத்தினோம்.

நமக்கு இயக்கம் தான் முக்கியம். பாஜக நிற்கவில்லை. இரட்டை இலைக்கு வாக்களியுங்கள் என்று சொன்னோம். ஆனால் பாஜகவின் கூட்டணியை ஏற்கமாட்டோம் என முஸ்லிம்கள் பலர் கூறினர். தமிழ்நாட்டில் 39 தொகுதிகளிலும் திமுக வெற்றி பெற்று என்ன செய்தது? மத உணர்வுகளை தூண்டிவிட்டு, வாக்குகளை திமுக அறுவடை செய்துகொள்கிறது." என்று பேசினார்.


அதேபோல், திருப்பூர் மாநகராட்சி 44 வது வார்டு கவுன்சிலர் கண்ணப்பன் பேசும்போது, "அதிமுக என்ற மாபெரும் இயக்கத்தை காப்பாற்ற வேண்டிய நிர்பந்தத்தால், அதிமுக பாஜக கூட்டணி உருவாகி உள்ளது. இல்லையென்றால், கட்சி 4 மற்றும் 5 ஆக உடையும் சூழலில் தான், கட்சியின் பொதுச் செயலாளர் திடமான கூட்டணியை உருவாக்க முன் வந்துள்ளார்." என்று கண்கலங்கியபடி பேசினார்.

அதிமுகவில் நிலவும் அதிருப்திகளுக்கு திருப்பூர் கூட்டம் ஒரு சான்றாகக் கருதப்படுகிறது. இன்னும் அடிமட்டத்தில் தொண்டர்கள் பலரும் கடுமையான அதிருப்தியில் இருப்பதாகக் கூறப்படும் சூழலில் வரும் மே.2ம் தேதி அதிமுக செயற்குழு கூட்டம் மிகுந்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நடைபெறவுள்ளது.

## சல்மான் கானுக்கு கொலை மிரட்டல் விடுத்தவர் மனநலம் பாதிக்கப்பட்டவர்: காவல்துறை தகவல்

மும்பை, ஏப்.16

நடிகர் சல்மான் கானுக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகக் கூறப்படும் குஜராத்தைச் சேர்ந்த நபர் மனநிலை சரியில்லாதவர் என போலீஸார் தெரிவித்துள்ளனர்.



மும்பை போக்குவரத்து காவல்துறையின் வாட்ஸ்அப் ஹெல்ப்லைனுக்கு நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) ஒரு செய்தி வந்தது, அதில் அனுப்புநர் சல்மான் கானின் காரை வெடிகுண்டு வைத்து தகர்க்கப் போவதாகவும், அவரை அவரது வீட்டிற்குள் நுழைந்து தாக்கப்போவதாகவும் மிரட்டி இருந்தார்.

இதையடுத்து, இது குறித்து பாரதிய நியாய சன்ஹிதாவின் பிரிவு 351 இன் கீழ் அப்போதைய நிலையில் அடையாளம் தெரியாத நபர் மீது வழக்குப் பதிவு செய்த மும்பை வோர்லி போலீஸார், பாந்த்ரா பகுதியில் உள்ள சல்மான் கானின் வீட்டுக்கு பாதுகாப்பை பலப்படுத்தினர்.

கொலை மிரட்டல் விடுத்தவர் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையில், மிரட்டல் விடுத்தவர் குஜராத்தின் வதோதரா மாவட்டத்தின் வாகோடியா தாலுகாவில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த 26 வயது இளைஞர் என்பது கண்டுபிடிக்கப்பட்டு, மும்பை மற்றும் குஜராத் போலீஸார் அவரது வீட்டுக்குச் சென்றுள்ளனர். மிரட்டல் விடுத்த நபர் மனநிலை சரியில்லாதவர் என்பது அப்போது தெரியவந்துள்ளது.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய வடோதரா மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரோஹன் ஆனந்த், "திங்கட்கிழமை வாகோடியா போலீஸாருடன் சேர்ந்து மும்பை காவல்துறையினர் குழு, வாகோடியாவில் உள்ள ஒரு கிராமத்தில் உள்ள சந்தேக நபரின் வீட்டுக்குச் சென்றது. மிரட்டல் செய்தியை அனுப்பிய 26 வயது நபர் மனநிலை சரியில்லாதவர் என்பதும், அவருக்கு சிகிச்சை நடந்து வருவதாகவும் தெரியவந்தது. இதையடுத்து, மும்பை போலீஸார் அவருக்கு நேரில் ஆஜராக நோட்டீஸ் வழங்கிவிட்டு அங்கிருந்து சென்றனர்." என்று தெரிவித்தார்.

பிரச்சனையை திசை திருப்ப இதுபோன்ற ஒரு தகவலை வெளியிட்டு உண்மையான குற்றவாளியை தப்ப வைக்க முயற்சிப்பதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

## விருதுநகர் அருகே மின்சாரம் பாய்ந்து மூவர் உயிரிழப்பு முதல்வர் நிவாரணம் அறிவிப்பு

சென்னை, ஏப்.16

விருதுநகர் அருகே காரிசேரி கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ள தமிழக முதல்வர் நிதியுதவி அறிவித்துள்ளார்.



இதுகுறித்து முதல்வர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், காரிசேரி கிராமம், வடக்குத் தெருவில் அமைந்துள்ள மாரியம்மன் கோவில் பொங்கல் மறுபூஜைக்காக நேற்று 14.4.2025 மாலை சுமார் 3.10 மணியளவில் ரேடியோ அமைக்கும் பணியின்போது அருகில் உள்ள டிரான்ஸ்பார்மர் வயரின் மீது மின்சார வயர் பட்டதில் ரேடியோ அமைக்கும் பணியை மேற்கொண்ட காரிசேரி கிராமத்தைச் சேர்ந்த திருப்பதி (வயது 27) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மேலும், மேற்படி சம்பவம் இறந்த திருப்பதி வீட்டிற்கு அருகில் நிகழ்ந்ததால் அவருடைய மனைவி லலிதா (வயது 25) மற்றும் பாட்டி பாக்கியம் (வயது 75) ஆகியோர் திருப்பதி என்பவரை காப்பாற்ற முயன்றபோது அவர்களும் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாணவர்கள் போராட்டங்களுக்கு தடை போட மறுத்த ஹார்வர்டு! மானியங்களை நிறுத்திய ட்ரம்ப்!

நியூயார்க், ஏப்.16

அமெரிக்காவின் புகழ்பெற்ற ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து வரும் மாணவர்களும் உயர்கல்வி பயில்கின்றனர். இந்நிலையில் பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர்கள் போராட்டங்களுக்கு அனுமதியளிக்கக் கூடாது என்று ட்ரம்ப் நிர்வாகம் உத்தரவிட்டது. இந்த உத்தரவை ஏற்க மறுத்ததால் ஹார்வர்டு பல்கலைகழகத்துக்கான $2.2 பில்லியன் மானியங்களையும் $60 மில்லியன் ஒப்பந்தங்களையும் நிறுத்தி வைப்பதாக ட்ரம்ப் நிர்வாகம் அறிவித்துள்ளது.




முன்னதாக, பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர்கள் செயல்பாட்டைக் கட்டுப்படுத்துமாறு ட்ரம்ப் நிர்வாகம் நீண்ட பட்டியல் ஒன்றை அனுப்பியது. அதில் இருந்த கெடுபிடிகளுக்கு இணங்கப்போவதில்லை என ஹார்வர்ட் பல்கலைக்கழகம் அறிவித்தது. இந்நிலையில் தான், ட்ரம்ப் நிர்வாகம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

நிபந்தனைகள் என்னென்ன? மாணவர்கள் முகக்கவசம் அணியக் கூடாது, மாணவர் சேர்க்கை முழுக்க முழுக்க மெரிட் அடிப்படையிலேயே இருக்க வேண்டும், பல்கலைக் கழக மாணவர்கள் பற்றி தணிக்கை மேற்கொள்ள வேண்டும், அதே போல் பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள் குழுக்களின் தலைவர்கள் அகியோரின் பின்புலம் பற்றியும் தணிக்கை செய்ய வேண்டும். வளாகத்தில் மாணவர்கள் கிரிமினல் நடவடிக்கைகள், வன்முறை, அடக்குமுறையில் ஈடுபடுவதைத் தடுக்க வேண்டும் என்று ட்ரம்ப் நிர்வாகம் வெள்ளிக்கிழமை அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பல்கலைக் கழக வளாகத்தில் பாலஸ்தீன் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட சர்வதேச பிரச்சினைகளை முன்வைத்து மாணவ அமைப்புகள் நடத்தும் போராட்டங்களை ஒடுக்கும் வகையிலேயே ட்ரம்ப் அரசு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் ட்ரம்ப் அரசின் கட்டுப்பாடுகளை ஏற்க மறுத்துள்ள ஹார்வர்டு பல்கலைக்கழகம், ஆட்சி அதிகாரத்தில் எந்தக் கட்சி வேண்டுமானாலும் அமரலாம். ஆனால், எந்த அரசாக இருந்தாலும் எங்கள் மீது சர்வாதிகாரத்தை செலுத்தக் கூடாது என்று தெரிவித்துள்ளது.

ஹார்வர்டு தலைவர் ஆலன் கார்பர் இது குறித்து கூறுகையில், "ட்ரம்ப் நிர்வாகத்தின் நிபந்தனைகள் பல்கலைக்கழகத்தில் முதல் திருத்த உரிமைகளுக்கு எதிரானது. இனம், நிறம், தேசத்தின் அடிப்படையில் மாணவர்கள் மீது எவ்வித பேதமும் காட்டப்படாது என்ற பல்கலைக்கழகத்தின் விதியை மீறுவதாக அமைந்துள்ளது. பல்கலைக்கழகத்தில் கல்வி பயில யாரை அனுமதிக்க வேண்டும், யாரை பாடம் நடத்த பணியமர்த்த வேண்டும் என்று அரசு எங்களுக்கு கட்டளையிட முடியாது. ஆட்சி அதிகாரத்தில் எந்தக் கட்சி வேண்டுமானாலும் அமரலாம். ஆனால், எந்த அரசாக இருந்தாலும் எங்கள் மீது சர்வாதிகாரத்தை செலுத்தக் கூடாது" என்று காத்திரமாகத் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்தின் கருத்துக்கு எதிர்வினையாற்றியுள்ள ட்ரம்ப் அரசின் யூத எதிர்ப்பை தடுக்கும் கூட்டு நடவடிக்கைக் குழு, "ஹார்வர்டு பல்கலைக்கழகத்தின் கருத்து நமது நாட்டின் புகழ் பெற்ற பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் தற்போது நிலவும் பிரச்சினைகளின் பின்னணியில் உள்ள தொற்று மனப்பான்மையை பிரதிபலிக்கும் வகையில் உள்ளது." என்று கண்டனம் தெரிவித்துள்ளது.





ராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் உட்கோட்டம் துறைமுகம் காவல்நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கலந்தாய்வு கூடத்தை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சந்தீஷ் திறந்துவைத்தார்

# சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் முடிவுற்ற வளர்ச்சி திட்டப்பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்த அமைச்சர்



சிவகங்கை ஏப்16

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஏரியூர் மற்றும் செவல்பட்டி ஊராட்சி பகுதிகளில் 03 முடிவுற்ற வளர்ச்சித் திட்டப்பணிகளை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நேற்றைய முன்தினம் (14.04.2025) பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் நல்லாட்சியில், கடந்த நான்கு ஆண்டுகளில் பொதுமக்களுக்கு பயனுள்ள வகையிலான பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்துவது மட்டுமன்றி, தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் வளர்ச்சி பணிகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், சீரான வளர்ச்சியையும், சமூக நீதியையும், ஜனநாயகத்தையும் தனது குறிக்கோளாக கொண்டு மக்கள் பணியாற்றிய பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான தமிழக அரசு அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்கி வருகிறது.

குறிப்பாக, தமிழ்நாடு முதலமைச்சர் ஆக்கப்பூர்வமாக தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் பல்வேறு நலத்திட்டங்கள், பிற மாநிலங்கள் மட்டுமன்றி, பிற நாடுகளுக்கும் முன்மாதிரியாக திகழ்ந்து வருகிறது. அதில், கல்வி மற்றும் சுகாதாரம் தனது இரு கண்களாக கொண்டு, அதற்கென அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்து, சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்.

அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் சிவகங்கை மாவட்டத்தின் கடைகோடி பகுதியில் வசிக்கும் மக்களின் தேவைகள் அறிந்து அவர்களின் கோரிக்கைகளுக்கு முன்பாகவே, பல்வேறு வளர்ச்சி பணிகள் மாவட்டம் முழுவதும் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.25 இலட்சத்திலிருந்து படிப்படியாக உயர்த்தப்பட்டு தற்போது ரூ.03.00 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

அதன்படி, திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழும் மற்றும் அரசின் பல்வேறு திட்டங்கள் வாயிலாகவும் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, முடிவுற்ற திட்டப்பணிகள் அனைத்தும் பொதுமக்களுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்வு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அதனைத்தொடர்ந்து சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம், ஏரியூர் ஊராட்சிக்குட்பட்ட ஆபத்தாரணப்பட்டி கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.09.13 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கடையும், அதே ஊராட்சிக்குட்பட்ட இ.வலையபட்டி கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.09.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கலையரங்கமும், செவல்பட்டி ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.09.13 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கடையும் என ஆக மொத்தம் ரூ.27.26 இலட்சம் மதிப்பீட்டிலான 03 முடிவுற்ற வளர்ச்சித்திட்டப்பணிகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட ஊராட்சிகளில், இன்னும் கூடுதல் தேவைகள் இருப்பின், என்னிடமோ அல்லது சம்மந்தப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் வாயிலாகவே எடுத்துரைப்பின், அக்கோரிக்கைகள் மீது அரசின் திட்டங்கள் வாயிலாகவோ அல்லது எனது சொந்த நிதியின் வாயிலாகவோ உரிய நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்படும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கா.வானதி, சிங்கம்புணரி வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜசேகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தாம்பரம் காந்தி ரோடு பகுதியில் 50வது வட்ட தேமுதிக சார்பில் நீர்மோர் பந்தல் திறப்பு விழா



தாம்பரம் ஏப்16

தாம்பரம் காந்தி ரோடு பகுதியில் 50வது வட்ட தேமுதிக சார்பில் நீர்மோர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது.

50வது வட்ட செயலாளர் ஜி.பாலமுருகன் தலைமையில் செங்கல்பட்டு மாவட்டம் செயலாளர் அனகை முருகேசன் அவர்களின் படி நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட செங்கல்பட்டு மாவட்ட துணைச் செயலாளர் மா.செழியன் நீர் மோர் பந்தலை ரிப்பன் வெட்டி துவக்கி வைத்து பொதுமக்கள் நீர்மோர் பழரசம் வெள்ளரி தர்பூசணி உள்ளிட்ட பொருட்களை வழங்கினார்கள் இந்நிகழ்ச்சியில் முன்னாள் நகர பொருளாளர் இ.கணேசன், மத்திய பகுதி செயலாளர் என்.ஆர்.ஆனந்த், மத்திய பகுதி அவை தலைவர் ஜி.பாலாஜி, மத்திய பகுதி பொருளாளர் சதிஸ் குமார், மேற்கு பகுதி செயலாளர் மார்க்கெட் ஞானப்பால், மேற்கு பகுதி பொருளாளர் ஜார்ஜ், மாவட்ட மகளிர் அணி செயலாளர் பாத்திமா ஸ்டெல்லா, மேற்கு பகுதி துணை செயலாளர் அரிமா மாலதி, மத்திய பகுதி துணைச் செயலாளர் வள்ளி, பானு, மேற்பகுதி பிரதிநிதி விஜயகுமார், 50வது வட்ட கழக அவைத் தலைவர் வாசிம் ராஜா, வட்டக் கழக பொருளாளர் என்.ராஜா வட்ட துணைச் செயலாளர் அலியார் மற்றும் தினேஷ், சிலம்பரசன் ரமேஷ், நட்ராஜ், இளவரசன், காஜா மொய்தீன், அப்துல் சையத், ஸ்டாலின், டைலர் ராஜா, சித்திக், பிரதாப், அப்துல்லா, பரத், 52வது வட்ட நிர்வாகி காஜா மொய்தீன், வாட்டர் கேன் கார்த்தி ஆகியோர் பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.



புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கரின் 135வது பிறந்த நாளை முன்னிட்டு காணொளி காட்சி வாயிலாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் காரைக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட தனியார் மஹாலில் நடைபெற்ற "சமத்துவ நாள்" விழாவில் கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் பங்கேற்று அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.உடன் மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜீத், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் மாங்குடி, மாவட்ட வருவாய் அலுவலர் செல்வ சுரபி, காரைக்குடி மாநகராட்சி துணை மேயர் குணசேகரன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ஆனந்தி, திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கை மாறன், 19 ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் ஹரிதாஸ் துரைராஜ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்..

# பெரியகுளத்தில் அம்பேத்கர் 134 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அஇஅதிமுக சார்பில் மாலை அணிவித்து மரியாதை;



பெரியகுளம் ஏப்.15

தேனி மாவட்டம் பெரியகுளத்தில் சட்டமாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 134 வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு அஇஅதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி ஆணைக்கிணங்க பெரியகுளம் பழைய பேருந்து நிலைய வளாக பகுதியில் அமைந்துள்ள அம்பேத்கர் அவர்களின் முழு உருவ வெண்கல சிலைக்கு அதிமுக பெரியகுளம் நகர் கழக செயலாளர் பழனியப்பன் தலைமையில் தேனி கிழக்கு மாவட்ட செயலாளர் முருக்கோடை ராமர், ஒன்றிய கழக செயலாளர்கள் அன்ன பிரகாஷ், ராஜகுரு ஆகியோர் முன்னிலையில் அஇஅதிமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வீரவணக்கம் செலுத்தினர். இந்நிகழ்வில் அம்மா பேரவை மாநில இணைச்செயலாளர் ஜெயக்குமார்,மாவட்ட கழக மாவட்ட துணைச் செயலாளர் முத்துலட்சுமி, மாவட்ட பொருளாளர் வைகை பாண்டி, தேனி நகர் கழக செயலாளர் கிருஷ்ணகுமார்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பெரியவீரன், தேனி கிழக்கு மாவட்ட இளைஞர் இளம்பெண்கள் பாசறை செயலாளர் கழகத்தின் போர்வாள் அப்பாஸ் மைதீன், பொதுக்குழு உறுப்பினர் தவமணி கருப்பசாமி,இலக்கிய அணி கிழக்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் தவமணி, தலைமை கழக பேச்சாளர் சுந்தரபாண்டி , தாமரைக்குளம் பேரூர் கழக செயலாளர் மனோகரன், மாவட்ட பிரதிநிதிகள் சுரேஷ், விஜய் ஆனந்த், பெரியகுளம் எம்.ஜி.ஆர் மன்ற செயலாளர் கணேசன் உட்பட மாவட்ட, நகர,ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக தொண்டர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மண்ணிவாக்கம் பெரி கலை அறிவியல் கல்லூரி ஆண்டு விழா - விளையாட்டு விழா




மண்ணிவாக்கம் ஏப்16

வண்டலூர் அடுத்த மண்ணிவாக்கத்தில் உள்ள பெரி கலை அறிவியல் கல்லூரி ஆண்டு விழா மற்றும் விளையாட்டு விழா வெகு சிறப்பாக நடைப்பெற்றது.

சென்னை தாம்பரம் அடுத்த மண்ணிவாக்கம் பெரி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கடந்த 12.04.2025 வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணியளவில் பெரி திறந்தவெளி கலை அரங்கில் நடை பெற்ற "கல்லூரி ஆண்ட மற்றும் விளையாட்டு நாள் விழா" வெகுசிறப்பாக நடைப்பெற்றது. இந்நிகழ்வில் பெரி கல்விக் குழுமத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் மாண்பமை சரவணன் பெரியசாமி தலைமையேற்று விழாவைத் தொடங்கிவைத்தார். பெரி கல்விக் குழும தலைமை இயக்க நிர்வாக அலுவலர் சசி வீரராஜன் மற்றும் பெரி கலை அறிவியல் கல்லூரி, கல்வி இயக்குநர் முனைவர் அ.குணசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பெரி கலை அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் அ.புருஷோத்தமன் வரவேற்று கல்லூரி நாள் ஆண்டு அறிக்கையை வாசித்தார். விழாவில் சென்னைப் பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி முனைவர். சி.அருள்வாசு சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். இதில் சிறப்பு விருந்தினராக சென்னை பல்கலைகழக.தேர்வு கட்டுபாட்டுத்துறை இயக்குனர் அருள்வாசு, விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசு கோப்பைகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கவுரவித்தார்.மேலும் பெரி கல்லூரியில் 100 சதவீத தேர்ச்சி கொடுத்த பேராசியர்களுக்கும் கல்லூரி சார்பில் பரிசுகள் வழங்கி கவுரவிக்கப்பட்டனர்.

அதனை தொடர்ந்து மெட்ராஸ் பல்கலைகழக தேர்வு கட்டுபாட்டு துறை இயக்குனர் அருள்வாசு மாணவர்களிடம் பேசும்போது, நடிகர் அஜித் போல் எதிலும் விடா முயற்சியாக இருந்தால் நிச்சயம் அனைத்திலும் வெற்றி பெறமுடியும். மேலும் படிப்பாக இருந்தாலும் சரி, விளையாட்டாக இருந்தாலும் சரி கடின உழைப்பு நிச்சயம் வெற்றி கொடுக்கும் என்றார். உடற்கல்வி ஆசிரியர் முனைவர். பத்மநாபன் விளையாட்டு போட்டி ஆண்டு அறிக்கையை வாசித்தார் இந்நிகழ்வில் பெரி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.



தேனி மாவட்டம்,தேனிஅல்லிநகரம் நகராட்சிகுட்பட்ட என்.ஆர்.டி மண்டபத்தில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற சமத்துவ நாள் விழாவில் பல்வேறு துறைகளின் சார்பில் 1,495 பயனாளிகளுக்கு ரூ.10.36 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் சட்டமன்ற உறுப்பினர்கள் சரவணக்குமார் (பெரியகுளம்), மகாராஜன் (ஆண்டிபட்டி) முன்னிலையில் வழங்கினார்.




மதுரை மாநகராட்சி மண்டலம் 4 (தெற்கு) அலுவலகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாமில் மேயர் இந்திராணி பொன்வசந்த் பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்றுக் கொண்டார் அருகில் துணை மேயர் தி.நாகராஜன் , மண்டலத் தலைவர் முகேஷ்சர்மா, துணை ஆணையாளர் ஜெய்னுலாப்தீன், உதவி ஆணையாளர் சாந்தி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



திருநெல்வேலி மாநகராட்சி மைய அலுவலக கூட்டரங்கில் வைத்து நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் மனுநாள் முகாமில் மேயர் கோ.ராமகிருஷ்ணன் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்கள். துணைமேயர் கே.ராஜூ , உதவி ஆணையாளர்கள் ஜான்சன் தேவசகாயம், து.சந்திரமோகன் ஆகியோர் உடன் உள்ளார்கள்.

# பம்மல் தெற்கு பகுதி திமுக சார்பில் நீர்மோர் பந்தல் திறப்பு விழா நிகழ்ச்சி




பம்மல் ஏப்.16

பம்மல் தெற்கு பகுதி திமுக சார்பில் நீர்மோர் பந்தல் திறப்பு விழா நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி அளவில் பம்மல் மண்டல அலுவலகம் அருகில் பம்மல் தெற்கு பகுதி செயலாளர்

1வது மண்டல குழு வே.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளர்களாராக குறு சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நீர் மோர் பந்தலை திறந்து வைத்து 2000 நபர்களுக்கு மோர், தர்பூசணி, கிருனி, வெள்ளரி, இளநீர், குளிர்பானங்கள் வழங்கினார்

இந்த நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட மாநகர தொகுதி பகுதி

அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் வட்டக் கழகச் செயலாளர்கள் வட்ட கழக நிர்வாகிகள் வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்..



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை புதிய பேருந்து நிலையம் அருகே மதுரை ராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் இரண்டு இருச்சக்கர வாகனங்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது இதில் TN63BH0624 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தில் பயணித்த ஈஸ்வரன் (எ)சாமி என்பவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது எதிரில் வந்த TN65BW7035 பதிவு எண் கொண்ட வாகனத்தில் பயணித்த இரண்டு நபர்களுக்கு சிறு காயம் ஏற்பட்டது சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் அரசு மருத்துவமனையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். விபத்து குறித்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்...

# சிவகங்கை மாவட்ட அளவிலான கிக் பாக்ஸிங் போட்டி தங்க பதக்கம் வென்றவர்கள் மாநில அளவான போட்டிக்கு தேர்வு






சிவகங்கை ஏப்16

சிவகங்கை மாவட்ட கிக்பாக்ஸிங் வீரர்கள் உற்சாகத்துடன் பங்கேற்றனர், சிவகங்கை மாவட்ட கிக் பாக்ஸிங் சங்கம் சார்பில், கிக் பாக்ஸிங் சாம்பியன்ஷிப் 2025ற்கான மாவட்டப் போட்டி வெகு விமர்சையாக ஏப்ரல் 13ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை சிவகங்கை மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் கிக் பாக்ஸிங் சங்கத் தலைவர் சதீஷ் மற்றும் பொதுச்செயலாளர்

ச.குணசீலன் தலைமையில் நடைபெற்றது, இப்போட்டியை இளைஞர் நலன் மற்றும் மாவட்ட விளையாட்டு அலுவலர் ராமேஷ்கண்ணன் மற்றும் சிவகங்கை நகர் காவல் நிலைய கண்காணிப்பளர் அன்னராஜ் மேலும் மாவட்ட உடற்கல்வி கண்காணிப்பாளர் கார்த்திகேயன் தொடங்கி வைத்தனர், 150ற்கும் மேற்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பாயிண்ட் ஃப யிட்,லைட் காண்டாக்ட், கிக் லைட், எனும் போட்டியில் பல்வேறு எடை பிரிவுகளில் இப்போட்டியில் பங்கேற்றனர், இதில் தங்க பதக்கம் வென்ற வீரர்கள் மட்டும் மாநில அளவிலான கிகிபாக்ஸிங் போட்டிக்கு தேர்வாகி உள்ளனர், மேலும் இந்த நிகழ்வில் 2024இல் தேசிய போட்டியில் சாதனை புரிந்த வீரர்களுக்கு திஷீகூஷீனீ2 என்கிற உயர் கல்விகக்கு விளையாட்டு ஒதுக்கீட்டில் பயன்பட கூடிய உயரிய சான்றிதலும் வழங்கப் பட்டது,மேலும் போட்டியில் நடுவர்களாக தேசிய அளவில் தகுதி பெற்ற தமிழ்நாடு கிக்பாக்ஸிங் சங்க நடுவர்கள் சந்துரு, துரைமுருகன்,சித்ரா மற்றும் செயலாளர் கண்காணிப்பில் இப்போட்டி நடைபெற்றது, இதில் சிவகங்கையில் இருந்து 22 வீரர் மற்றும் வீராங்கனை யினர் மாநில கிக்பாக்ஸிங் சாம்பியன்ஷிப் போட்டிக்கு தேர்வாகி உள்ளனர், இந்த கிக்பாக்ஸிங் விளையாட்டு போட்டி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தினால் அங்கீகரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது

# நெல்லை ரோஸ்மேரி பள்ளியில் மாணவனுக்கு அரிவாள் வெட்டு! தடுக்க வந்த ஆசிரியருக்கும் காயம்





நெல்லை ஏப்ரல் 16

நெல்லையில் பள்ளி மாணவர்களுக்கு இடையே மோதல்: ஒரு மாணவனுக்கு அரிவாள் வெட்டு, ஆசிரியருக்கும் காயம் ஏற்பட்டது.

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டையில் அமைந்துள்ள தனியார் பள்ளியான ரோஸ்மேரி மெட்ரிக் பள்ளியில் நேற்று காலை நடைபெற்ற சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

அந்த பள்ளியில் எட்டாம் வகுப்பில் பயிலும் இரண்டு மாணவர்களுக்கு இடையே, பென்சில் கொடுக்கல் வாங்கலைத் தொடர்ந்த பிரச்சனையில் வாக்குவாதம் ஏற்பட்டு, பின்னர் அது மோதலாக மாறியது. அதில் ஒருவன் அரிவாளுடன் மற்றொரு மாணவனை தாக்கியதாகக் கூறப்படுகிறது. இந்த தாக்குதலில் மாணவன் படுகாயமடைந்தார். சம்பவ இடத்திலிருந்த ஆசிரியர் ஒருவர் அவரை தடுக்க முயன்றபோது, அவரும் காயமடைந்துள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

காயமடைந்த மாணவன் உடனடியாக அருகிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. உயிருக்கு அபாயம் இல்லை என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்திற்கு காரணமான மாணவர் பாளையங்கோட்டை காவல் நிலையத்தில் சரணடைந்ததாகத் தெரிகிறது. சம்பவம் குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். பள்ளி வளாகத்தில் அரிவாள் போன்ற ஆயுதம் எப்படி வந்தது என்பதையும் விசாரணை குழு ஆராய்கிறது.

பள்ளிகளில் மாணவர்களுக்கு இடையிலான வன்முறைகள் அதிகரித்து வருவதை இந்தச் சம்பவம் மீண்டும் சுட்டிக் காட்டுகிறது. மாணவர்களின் மனநிலையை கவனித்து, சிறு பிரச்சனைகள் பெரிதாக மாறாதவாறு தடுக்கும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் அவசியமென பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# சிவகங்கை மாவட்டத்தில் பூஜ்ஜிய நிழல் தினம் நேரில் பார்த்து மகிழ்ச்சி அடைந்த மாணவர்கள்



சிவகங்கை ஏப்16

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 15.4.2025 செவ்வாய்கிழமை பிற்பகல் 12:16 மணியளவில் நிழலே விழாத நிலையை பார்த்து மாணவர்கள் ரசித்தனர். கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வளாகத்தில் ஆசிரியர்கள் மாணவர்கள் மத்தியில் பூஜ்ஜிய நிழல் தினத்தை நேரிடையாக தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி விளக்கி கூறும்போது தினமும் தானே சூரியன் நம் தலைக்கு மேலே விழுகிறது. இதில் என்ன அதிசயம் உள்ளது. அதுதான் இல்லை. வருடத்தில் இரண்டு முறை மட்டுமே சூரியன் மிகச்சரியாக நம் தலைக்கு மேலே வரும். ஏப்ரல் மாதத்தில் ஒருநாளும் ஆகஸ்ட் மாதத்தில் ஒருநாளும் என இரண்டு நாட்களில் மட்டும் நிழல் முழுமையாக மறையும். மற்ற நாட்களில் நிழல் இடது புறமாகவோ வலது புறமாகவோ சிறிது நிழலாவது விழும் என விளக்கம் அளித்தார். தலைமையாசிரியர் தெய்வானை கணிதப் பட்டதாரி ஆசிரியை மீனாட்சி ஆசிரியைகள் கமலம்பாய் வாசுகி கணினி பயிற்றுநர் வித்யா மற்றும் மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர்.

தேவகோட்டை சாக்கோட்டை ஒன்றியங்களில் மதியம் 12:15 மணிக்கும் சிவகங்கை காளையார்கோவில் இளையான்குடி கல்லல் ஒன்றியங்களில் மதியம் 12.16 மணிக்கும் மானாமதுரை திருப்புவனம் ஒன்றியங்களில் மதியம் 12.17 மணிக்கும் பூஜ்ஜிய நிழல் தினம் நடைபெற்றது. பூஜ்ஜிய நிழல் தினத்தை குறித்த நேரத்தில் காண மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் சமூக ஊடகங்கள் வழியாக செய்திகள் அனுப்பி பலரும் பார்த்து பயன்பெற ஏற்பாடு செய்யப்பட்டது.

## பெரியகுளத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் அம்பேத்கர் பிறந்தநாள் முப்பெரும் விழா





பெரியகுளம், ஏப்.16

தேனி மாவட்டம் பெரிய குளத்தில் சட்ட மாமேதை, புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் 134 வது பிறந்தநாள் விழா மற்றும் பெரியகுளம் பகுதியில் அம்பேத்கர் அவர்களின் வெண்கல சிலை நிறுவி 25 ஆண்டுகள் நிறைவடைந்ததை கொண்டாடும் விழா மற்றும் தேர்தல் அங்கீகார வெற்றி விழா உள்ளிட்ட முப்பெரும் விழா கொண்டாடப்பட்டது.

பெரியகுளம் தென்கரை அம்பேத்கர் நகர் பகுதியில் இருந்து பெரியகுளம் வடகரை அம்பேத்கர் சிலை வரை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தேனி கிழக்கு மாவட்ட செயலாளர் ரபீக் தலைமையில் விசிக வினர் பேரணியாக சென்று அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வீரவணக்கம் செலுத்தினர். இந்நிகழ்வில் முன்னாள் தேனி (கி) மாவட்ட செயலாளர் நாகரத்தினம், பெரியகுளம் நகர செயலாளர் ஜோதிமுருகன், தொல். தளபதி, தொகுதி செயலாளர் தமிழ்ப்பாண்டி, ஒன்றிய செயலாளர் ஆண்டி, தமிழன், சையது, சருத்துப்பட்டி அழகுராஜா, ஜெ.ஜெ ஆட்டோ ஜெயராஜ், தலித் தர்மா, ரூபன் தேவா, நாகர்ஜுன், இரா. செந்தில் குமார், ஈஸ்வரன், உட்பட விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் பொறுப்பாளர்கள், பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## சோழவந்தான் அருகே அதிமுக சார்பில் பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்



சோழவந்தான், ஏப்.15


மதுரை புறநகர் மேற்கு மாவட்டம் வாடிப்பட்டி வடக்கு ஒன்றிய அ.தி.மு.க சார்பாக கிளைக் கழக பூத்கமிட்டி கூட்டம் திருவாயநல் லூரில் நடந்தது. ஒன்றிய செயலாளர் எம்.காளிதாஸ் தலைமை தாங்கினார் கூட்டத்தில் கலந்துகொண்ட முன்னாள் அமைச்சர் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான ஆர் பி உதயகுமார் பூத் கமிட்டி கிளைக் கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எம் வி கருப்பையா மாணிக்கம், எஸ் எஸ் சரவணன், மாநில அம்மா பேரவை இணைச் செயலாளர்கள் ராஜேஷ் கண்ணா, வெற்றிவேல் மகளிர் அணி மாவட்ட செயலாளர் லட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பாசறை மாவட்ட துணை செயலாளர் மணிமாறன் வரவேற்றார். . கிளைக் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்



மதுரை மாவட்டம் விராலிப்பட்டியில் வாடிப்பட்டி குழுவை சேர்ந்த மதுரை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவி ம கீர்த்தனா ஸ்ரீ கிராமப்புற தங்கல் மற்றும் கிராமப்புற அனுபவ திட்டத்தின் கீழ் நெல் விதையில் டைக்கோடெர்மாவை பயன்படுத்தி விதை நேர்த்தி செய்யும் முறை பற்றி செயல் விளக்கம் அளித்தார்.




திருப்பூர் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் மாவட்ட சுற்றுலாத்துறை மற்றும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இணைந்து பாரதி வித்யாஸ்ரமத்திலிருந்து மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு பூங்கொத்துகள் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் வழங்கி கல்வி சுற்றுலா செல்வதற்காக வழி அனுப்பிவைத்தனர். உடன் மாவட்ட சுற்றுலாத்துறை அலுவலர் அரவிந்த்குமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் வசந்த ராம்குமார் ஆகியோர் உள்ளனர்.



தேனி மாவட்டம் பெரியகுளத்தில் புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 134 வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு ஆர்.கே. கார்ப் கேர் நிறுவனம் சார்பில் இயக்குநர் ஆர்.கே .ஓவியன், மேலாளர் தாவித் , வழக்கறிஞர் சின்னமுத்து ஆகியோர் தலைமையில்பெரியகுளம் பழைய பேருந்து நிலைய வளாகப் பகுதியில் உள்ள புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் முழு உருவ வெண்கல சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் ஆர்.கே. கார்ப் கேர் நிறுவனம் சார்பில் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

## பெரியகுளத்தில் புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பாஜக சார்பில் மாலை அணிவித்து மரியாதை




பெரியகுளம் ஏப்.16

பெரியகுளத்தில் புரட்சியாளர் அம்பேத்கர் 134 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டுபா ஜ க சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

தேனி மாவட்டம் பெரியகுளத்தில் புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 134வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு பெரியகுளம் பழைய பேருந்து நிலைய வளாக பகுதியில் அமைந்துள்ள அம்பேத்கர் அவர்களின் முழு உருவ வெண்கல சிலைக்கு பாரதிய ஜனதா கட்சி பெரியகுளம் நகர தலைவர் திவ்யா ராஜசேகர் தலைமையில் மாவட்ட தலைவர் ராஜபாண்டி முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் தேனி பாராளுமன்ற முழு நேர ஊழியர் முருகன், பொறுப்பாளர்கள் வசந்தபாலாஜி, வழக்கறிஞர் கணேஷ் குமார், வழக்கறிஞர் சன்னாசிபாபு, கோபிகண்ணன், முனியாண்டி, நகர நிர்வாகிகள் நாட்ராயன், தீபக், விஜய் கார்த்திக், மாவட்ட, நகர, ஒன்றிய, நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், மகளிர் அணியினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட 21வது வட்ட திமுக சார்பில் மாபெரும் நீர் மோர் பந்தல் திறப்பு விழா



பல்லாவரம் ஏப்.16

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் தளபதி மு.க ஸ்டாலின் ஆணைக்கினங்க

தாம்பரம் மாநகராட்சி 21வது வட்ட திமுக சார்பில் 21வது மாமன்ற உறுப்பினர் கலை செல்வி வெங்கடேசன் தலைமையில் 21வது வட்டச் செயலாளர் வெங்கடேசன் அவர்கள் ஏற்பாட்டில் மாபெரும் நீர்மோர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கலந்துகொண்டு நீர்மோர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர்மோர், வெள்ளரி, நுங்கு, இளநீர், பதநீர், குளிர்பானங்கள் உள்ளிட்ட பொருட்களை வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில் 2வது மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, தெற்கு பகுதி கழக செயலாளர் இ.எஸ். பெர்னாட் மற்றும் பகுதி நிர்வாகிகள் வட்ட நிர்வாகிகள் இளைஞர் அணி மாணவரணி மகளிர் அணி, நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்..

## காரைக்குடி லீடர்ஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி ஆண்டு விழா






காரைக்குடி, ஏப்.16

காரைக்குடி லீடர்ஸ் மெட்ரிகுலேஷன் மற்றும் மேல்நிலைப் பள்ளியின் 21வது ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி லீடர்ஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியின் 21வது ஆண்டு விழா, தமிழ் புத்தாண்டு அன்று 14.4.2025, திங்கள்கிழமை மாலை 5. 32 மணியளவில் நடைபெற்றது. ஓய்வுபெற்ற காவல்துறை உயர் அதிகாரி மோட்டிவேஷனல் ஸ்பீக்கர் கலியமூர்த்தி மிறிஷி சிறப்புரையாற்றினார், அதனை தொடர்ந்து மாணவர்களுக்கு நிர்வாக தலைவர் ராஜ மாணிக்கம், லீடர்ஸ் அகாடமி முதல்வர் வளர்மதி, லீடர்ஸ் மெட்ரிகுலேஷன் ஸ்கூல் முதல்வர் சசிகலா ஆகியோர் முன்னிலையில் மாணவர் களுக்கு சான்றிதல்கள் மற்றும் கேடயங்கள் வழங்கப்பட்டது,

மேலும் மாலையில் தொடங்கி கலை நிகழ்ச்சிகள் பிரம்மாண்டமான அளவில் நடைபெற்றது. ஏற்பாடுகளை பள்ளி நிர்வ ாகத் தினரும் ,ஆசிரியர்கள், ஆசிரியைகள் மற்றும் மாணவ, மாணவியர்கள் சிறப்பாக செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## சிவகங்கை மாவட்ட அளவிலான வூசு போட்டியில் திருப்புத்தூர் ருத்ரன்ஷா சிலம்பப் பள்ளி மாணவர்கள் வெற்றி









தேவகோட்டை, ஏப்.16

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் நடைபெற்ற சிவகங்கை மாவட்ட அளவிலான வூசு தற்காப்புக் கலை போட்டியில் திருப்புத்தூர் ருத்ரன்ஷா சிலம்பப் பள்ளி மாணவர்கள் வெற்றி பெற்று 13 பதக்கங்களை வென்றனர். சிவகங்கை மாவட்டத்தின் பல்வேறு ஊர்களில் இருந்து நூற்றுக்கணக்கான மாணவர்கள் பங்கு பெற்ற மாவட்ட அளவிலான இந்த தனிநபர் போட்டி மற்றும் சண்டையிடுதல் போட்டியில் திருப்புத்தூர் ருத்ரன்ஷா சிலம்பப் பள்ளி மாணவர்கள் பங்கேற்று ஆறு முதல் பரிசு நான்கு இரண்டாம் பரிசு மற்றும் மூன்று மூன்றாம் பரிசுகள் என மொத்தம் 13 பதக்கங்களை பெற்றனர். பரிசு வென்ற மாணவர்களை ருத்ரன்ஷா சிலம்பப் பள்ளியின் ஆசான் நமச்சிவாயம் மற்றும் பயிற்சியாளர்கள் லதா நமச்சிவாயம், சுந்தரமூர்த்தி, சுந்தரமணி ஆகியோரும் மற்றும் பெற்றோர்களும் பாராட்டினர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161